நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# D.V.C. No. 8 of 2024

## P.W.1 –ன் வாக்குமூலம்

**( புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெண்ணிலா |
| தந்தை / கணவர் பெயர் | : | சிவக்குமார் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 29 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 19–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர்மனுதாரர் ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்குவிசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 2.55 p.m.,)

1. எனக்கும் எனது கணவருக்கும் திருமணமாகி ஏழாவது வருடம் தொடங்கிவிட்டது. நானும் எனது கணவரும் கடந்த மூன்று வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் தற்போது கொளத்தூரில் உள்ள எனது அப்பா வீட்டில் வசித்து வருகிறேன். 2025 ஏப்ரல் 30 தேதி முதல் தலைமைச் செயலகத்தில்

தட்டச்சராக பணியில் சேர்ந்துள்ளேன்.

1. திருமணத்திற்கு பிறகு நாங்கள் கூட்டுக்குடும்பமாகத்தான் வசித்து வந்தோம். 2021 வரை நான்கு வருட காலம் நாங்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம். 2019 ஆம் வருடம் எனது குழந்தை பிறந்து ஒரு வருடம் எனது பெற்றோர் வீட்டில் இருந்த பிறகு திரும்ப வரும்போது தனிக்குடித்தனமாகத்தான் வாழ ஆரம்பித்தோம்.

2. Srei பைனான்ஸ் லிமிடெட் என்ற கம்பெனியில் திருமணத்தின் போது என் கணவர் வேலை செய்து கொண்டு தனியாக ஆம்னி பஸ் வைத்து தொழில் செய்து வந்தார். மூன்று ஆம்னி பஸ்கள் வைத்திருந்தார். நாங்கள் ஒன்றாக இருந்த காலம் வரையும் மேற்படி தொழிலை செய்து வந்தார் என்றால் சரிதான். நான் அவ்வாறு தவறாக சொல்கிறேன் என்றாலும் 2019 ஆம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் கடன் தவணை கட்ட முடியாமல் பேருந்துகளை எனது கணவர் விற்று விட்டார் என்றால் அவர் விற்றது எனக்கு தெரியாது.

3. நான் திருமணத்தின் போது எம் இ முதலாம் ஆண்டு படித்து வந்தேன். என்னிடம் என்னுடைய திருமண அழைப்பிதழ் என்றால் சரிதான். (தமிழில் உள்ள திருமண பத்திரிக்கை எ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதில் நான் ME படித்து முடித்தவாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேலே கோடு போடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு திருமணத்தின் போது நான் ME படிப்பில் சேரவில்லை என்றாலும் எனது கணவர் ME படிப்பில் சேர்த்து விடுகிறேன் அவ்வாறு பத்திரிகையில் போடுங்கள் என்று சொன்னதால்தான் திருமண பத்திரிகையில் ME என்று போட்டு பத்திரிகை அச்சிடப்பட்டது என்றால் சரியல்ல.

4. எனது பிரமாண பத்திரத்தில் குரூப் 2 தேர்வு பயிற்சிக்கு எனது கணவர் வீட்டில் இருந்து சென்று வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் இரண்டு மாதம் நான் கர்ப்பமாக இருக்கும் போது போனேன். மேற்படி பயிற்சிக்கு செல்ல எனது அப்பா தான் சப்போர்ட் செய்தார். என் அப்பா கல் உடைக்கும் வேலை செய்து வருகிறார். என் அப்பா வேலைக்கு போகும் என் அண்ணனிடமிருந்து ரூபாய் 7000 பணம் வாங்கி மேற்படி பயிற்சிக்காக பணம் கட்டினார். நான் சொல்வது தவறு என்றாலும் எனது கணவர் தான் அந்த பயிற்சிக்காக பணம் கட்டினார் என்றாலும் சரியல்ல.

5. எனது வளைகாப்பு எனது பெற்றோர் பக்கத்தில் இருந்த ஒரு ஆசிரமத்தில் தான் நடத்தினார்கள். வீட்டில் செய்ய அனுமதிக்கவில்லை. வளைகாப்பு நடத்த எனது அப்பா பணம் இல்லை என்று சொன்னதால் எனது கணவர் தான் செலவு செய்து எனது கணவர் வீட்டுக்கு அருகில் இருக்கும் சௌராஷ்டிரா மடத்தில் உள்ள மண்டபத்தில் வளைகாப்பு நடத்தினார் என்றால் சரியல்ல.

6. வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக சமூக நலத்துறை மற்றும் காவல் துறையிடம் நான் புகார் அளிக்கவில்லை ஆனால் வீட்டில் அனைவருக்கும் தெரியும். என்னிடம் காட்டப்படுவது எனது தரப்பில் நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.5 புகார் ரசீது என்றால் சரிதான். நான் தான் அந்த புகாரை கொடுத்தேன். எனது கணவர் மீது கொடுத்தேன். எனது கணவர் கள்ளத்தொடர்பு வைத்துக் கொண்டு என்னை அடித்து கொடுமை செய்ததாக புகார் கொடுத்தேன். நான் எனது கணவர் கள்ள தொடர்பு வைத்துள்ளதாக வாய்மொழியாக சொன்னேன் ஆனால் புகார் ரசீதில் அவர்கள் குறிப்பிடவில்லை.

7. வீதியில் வைத்து செருப்பால் அடித்ததற்கும் விளக்கமாறால் அடித்ததற்கும்

சாட்சியாக பக்கத்தில் இருந்தவர்களை அழைத்து வர முடியுமா என்றால் அவர்கள் வீடு மாறி போய் இருக்கலாம் என்னால் உறுதியாக சொல்ல முடியாது. நான் வேலைக்காக நேர்முகத்தேர்வுக்கு செல்லும் போது சென்னையில் உள்ள எனது அக்கா வீட்டில் தங்கி இருந்தேன். நான் சொன்னவாறு எனது அக்கா வீட்டில் நான் தங்கவில்லை என்றாலும் நான் எனது தோழி வீட்டில் தான் தங்கியிருந்தேன் என்றாலும் எனது அக்காவுக்கும் எனக்கும் தகராறு என்றாலும் சரியல்ல. அங்கு போய் வருவதற்கான செலவை எனது கணவர் தான் செய்தார் என்றாலும் நேர்முகத் தேர்வுக்கு செல்லும் செலவை எனது கணவர் தான் செய்தார் என்றாலும் சரி அல்ல.

8. கிருஷ்ணகிரி குருப் தேர்வுக்கான பயிற்சிக்கு எனது கணவர் தான் சேர்த்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல கிருஷ்ணகிரிக்கு நான் பயிற்சிக்கு செல்லும்போது எனது அப்பா வீட்டில் இருந்து தான் சென்றேன் எனது அப்பா தான் செலவு செய்தார்.

9. எனது கணவர் தான் டைவர்ஸ் கொடுத்துவிட்டு போ என்று என்னை பார்த்து சொன்னதாக பிரமான பத்திரத்தில் கூறிவிட்டு நான் தான் விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்போது பிரிந்து வந்து மூன்று வருடமாகிறது இதுவரைக்கும் எனது பாப்பாவை பார்க்க வரவும் இல்லை கல்வி கட்டணம் கட்ட முன்வரவும் இல்லை அதனால் தான் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

10. எனது கணவர் கள்ளத்தொடர்பு வைத்துள்ளார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் ஏதும் இல்லை. ஆனால் நான் நேரடியாக பார்த்தேன். நான் தாக்கல் செய்த

பிரமாணம் பத்திரத்தில் எனது கணவர் என்னை அடித்து முகத்தை உடைத்து விட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது பெற்றோர் வந்து சமாதானம் செய்ததால் காவல்துறையில் புகார் அளிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 புகைப்படத்தில் உள்ளது நான் தான். மேற்படி சேலம் வீட்டில் நான் இருக்கும் போது எனது கணவர் உதைத்து வாசல் படி முனையில் பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது. 2021 ஆம் வருடம் அக்டோபர் மாதம் நடைபெற்றது. ஆனால் தேதி எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் நான் எங்கேயோ விழுந்து அடிபட்டு விட்டு வழக்குக்காக அந்த புகைப்படத்தை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் நான் சொன்னவாறு நடந்திருந்தால் உடனே நான் காவல் நிலையம் சென்று இருப்பேன் என்றால் சரியில்லை.

11. எனது கணவர் எனக்கு அனைத்து சவரச்சனைகளையும் செய்து பராமரித்துக் கொள்ள தயாராக இருக்கிறார் என்றாலும் நான் தான் சேர்ந்து வாழ தயாராக இல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஆரம்பத்தில் இருந்து எனது கணவருடன் சேர்ந்து வாழ எனக்கு பிடிக்கவில்லை என்றாலும் அதனால் தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு எனது கணவர் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.10 p.m.,

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**